**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ஆம் நாள் புதன்கிழமை

**குற்றப்பல்வகை மனு எண்.980/2026 ல்**

**அமர்வு வழக்கு எண்.22/2021**

தமிழ்நாடு அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
ஜெம்புநாதபுரம் காவல் நிலையம்,
குற்ற எண்.129/2019. ... மனுதாரர் / புகார்தாரர்

/எதிர் /

அப்துல் ஹக்கீம்,
த/பெ அப்துல்ராஜாக்.
பெருமாள் கோயில்தெரு,
வேப்பூர் கிராமம்,
குன்னம் தாலுக்கா,
பெரம்பலூர் மாவட்டம். ... எதிர்மனுதாரர்/ எதிரி

இம்மனு, கடந்த 02.06.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் / புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.A. ஆனந்தன் அவர்களும், எதிர்மனுதாரர் /எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.சிவக்குமார் அவர்களும், முன்னிலையாகி, மனுவை நடத்த, மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## உத்தரவு

1) மனுதாரர்/புகார்தாரர்/அரசு தரப்பில், இந்த மனுவானது கு.வி.முச. பிரிவு 311Cr.P.C./348 BNSS –ன் கீழ் அரசுத்தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரிக்கவும், இமயம் கல்லூரி விடுதி மாணவர்களின் உள்ளே வெளியே பதிவேடு உண்மை நகலை (In and out register) குறியீடு செய்யவும் அனுமதி கோரி, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/புகார்தாரர்/அரசுத்தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில். மனுவில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக்கூறி, இந்த வழக்கில் எதிரிக்கெதிராக சாட்சிய விசாரணை தொடங்கி, சில சாட்சிகள் ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையில், அரசுத்தரப்பில் ஏற்கனவே சாட்சிப்பட்டியலில் (In and out register) தொடர்பாக விசாரணை செய்வதற்காக சேர்க்கப்பட்ட 31வது சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள பாக்கியசெல்வம் என்பவர் தற்போது உடல்நிலை சரியில்லாததால், அவரை விசாரிக்க முடியாத நிலையிலிருப்பதாகவும், அவரிடம் ஏற்கனவே இமயம் கல்லூரி மாணவர்கள் உள்ளே வெளியே செல்லும் பதிவேடு(In and out) உண்மை நகல் புலன் விசாரணை அதிகாரியால் பெறப்பட்டுள்ளதாகவும், அதை கூடுதல் ஆவணமாக குறியீடு செய்யவேண்டி, தற்போதைய மேற்படி இமயம் விடுதி காப்பாளர் ஜெயப்பிரகாஷ் என்பவரை கூடுதல் சாட்சியாக விசாரிக்க வேண்டியுள்ளதாகவும், மேற்படி சாட்சியின் சாட்சியமும், மேற்படி

ஆவணமும் இந்த வழக்கை தீர்மானிக்க மிகவும் முக்கியமானது என்றும், எனவே, மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

3) மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிருரையில் உள்ள சங்கதிகளையே விவரித்துக்கூறி, இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், ஏற்கனவே பாக்கியசெல்வம் என்பவரை சாட்சியாக அரசுத்தரப்பில் காட்டப்பட்டுள்ளது உண்மைதான் என்றும், ஆனால், அவர் சான்றொப்பமிட்டதாக ஆவண நகல் எதுவும் இறுதி அறிக்கையுடன் புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்படவில்லையென்றும், எதிரிக்கும், இறந்தவருக்கும், உள்ள முன்விரோதத்தைக் காட்டுவதற்காக மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்ய முயற்சிப்பதாகவும், தற்போதும் மேற்படி In and out ஆவணத்தின் அசல் பதிவேட்டை தாக்கல் செய்யவில்லையென்றும், அதற்கான விளக்கமும் இல்லையென்றும், மேலும், மேற்படி பதிவேடு பெறப்பட்டதாகக் கூறப்படும் தேதிக்கும், சாட்சியை விசாரித்த தேதிக்கும் முரண்பாடு உள்ளதாகவும், எனவே, அரசுத்தரப்பு தனது வழக்கில் உள்ள குறைபாட்டை பூர்த்தி செய்யவும், வழக்கை இழுத்தடிக்கவும், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இந்த எதிர்மனுதாரர்/எதிரிக்கெதிராக அரசுத்தரப்பில் இதச பிரிவுகள் 302 மற்றும் 449ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, வழக்கு விசாரணை நடந்து வருகிறது. ஏற்கனவே அரசுத்தரப்பில் மொத்தம் 19 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) இந்த நிலையில், மனுதாரர்/அரசுத்தரப்பில் ஏற்கனவே சாட்சியப்பட்டியலில் கூறப்பட்டிருந்த 31வது சாட்சியான பாக்கியசெல்வம் என்பவர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், எனவே, அவரை விசாரிக்க இயலவில்லையென்றும், அவரால் சான்றொப்பமிட்ட இமயம் கல்லூரி விடுதியின் மாணவர்கள் In and out register–ன் உண்மை நகலை, தற்போதைய வார்டன் ஜெயப்பிரகாஷ் என்பவரை கூடுதல் சாட்சியாக விசாரித்து, அவர் மூலம் குறியீடு செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கூடுதல் ஆவணத்தின் உண்மை நகலும் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேற்படி கூடுதல் ஆவணம் 10.02.2020 தேதியில் சான்றொப்பமிடப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி ஆவணத்தை, குற்ற இறுதி அறிக்கையுடன் புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்யவில்லை. இவ்வாறு புலன் விசாரணை அதிகாரியால் ஏற்கனவே பெறப்பட்ட ஆவணத்தை குற்ற இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு பின்னிட்டு தாக்கல்

**செய்ய அனுமதி கோருவது தொடர்பாக, பின்வரும் சமீபத்திய மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்வு முடிவில் கீழ்கண்டவாறு தீர்மானித்துள்ளது.**

" In Sameer Sandhir vs Central Bureau Of Investigation on 23 May, 2025 In CRIMINAL APPEAL NOS.4718-4719 OF 2024 (**2025 INSC 776),** wherein Hon'ble Apex Court has held as follows: -

...This decision holds that if there is an omission on the part of the prosecution in forwarding the relied upon documents to the learned Magistrate, even after the chargesheet is submitted, the prosecution can be permitted to produce the additional documents which were gathered prior to or subsequent to the investigation.

17. In our view, the High Court ought not to have gone into the issue of the authenticity of the CDs allowed to be produced. Whether the CDs produced were the same which were seized on 4th May 2013 and 10th May 2013, is something which will have to be proved by the prosecution. The issue regarding the legality of the Certificate under Section 65B of the Evidence Act ought not to have been dealt with at this stage. Even if the production was allowed, the issue of the CDs' authenticity remains open.

18. In the circumstances, we do not find fault with the impugned judgment of the Delhi High Court. However, the issue of whether the CDs produced were the same which were seized on 4th May 2013 and 10th May 2013 is left open. The issue regarding the validity of the certificate under Section 65B of the Evidence Act is also left open. The issue of the authenticity of the CDs is kept open...."

8) மேற்படி தீர்வு முடிவின்படி, குற்ற இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்படாத, புலன் விசாரணை அதிகாரியால் அது புலன் விசாரணையின் போதோ அல்லது அதற்கு பிறகோ கைப்பற்றப்பட்ட ஆவணங்களை, அதன் உண்மை தன்மையை அரசுத்தரப்பே நிரூபணம் செய்யவேண்டுமென்ற, நிபந்தனைக்குட்பட்டு குறியீடு செய்யலாம் என தெரிகிறது. எனவே, மேற்படி இமயம் கல்லூரி மாணவர் விடுதியின் சம்பவகால சமயத்தில் பராமரிக்கப்பட்டதாகக் கூறப்படும் In and out register–ன் உண்மை நகலின், உண்மைத்தன்மை மற்றும் அசல் ஆவணம் தாக்கல் செய்யாதது மற்றும் இதர முரண்பாடுகள் தொடர்பாக, எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில், மேற்படி கூடுதல் சாட்சியிடமும் மற்றும் புலன் விசாரணை அதிகாரியிடமும் கேள்விகள் எழுப்பிக்கொள்ளலாமென்றும், கூடுதல் ஆவணத்தின் உண்மை தன்மை மற்றும் அவை அரசு தரப்பு வழக்கை எந்தவிதம் நிரூபிக்க உதவும் என்பதை, வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும் என்று முடிவு செய்யப்படுகிறது. மேலும், மேற்படி கூடுதல் ஆவணம் எதிரி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்ய அனுமதித்து இம்மனுவை பின்வருமாறு அனுமதிப்பதே, நீதியின் நலனுக்கு உகந்ததென முடிவு செய்யப்படுகிறது.

9) <u>முடிவாக,</u>

இந்த மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது.

1) மனுவில் கண்டுள்ள கூடுதல் சாட்சியை அரசுத்தரப்பில் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறது. அவர் மூலம் இமயம் கல்லூரி மாணவர் விடுதியின்

சம்பவகால சமயத்தில் பராமரிக்கப்பட்டதாகக் கூறப்படும் In and out register–ன் உண்மை நகலை, எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது.

2) மேற்படி கூடுதல் ஆவணத்தின் உண்மைத்தன்மை மற்றும் அதன் அசல் ஆவணம் தாக்கல் செய்யாதது மற்றும் இதர முரண்பாடுகள் தொடர்பாக, எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில், மேற்படி கூடுதல் சாட்சியிடமும், புலன் விசாரணை அதிகாரியிடமும், உரிய கேள்விகள் எழுப்பிக்கொள்ளலாமென்றும், மேற்படி கூடுதல் ஆவணத்தின் உண்மை தன்மை மற்றும் அவை அரசு தரப்பு வழக்கை எந்தவிதம் நிரூபிக்க உதவும் என்பதை, வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும் என்று முடிவு செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.17 16:51:52 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**